உ

கடவுள் துணை.

—*—

கலியுகச்சிந்து.



சென்னை:

ஸ்ரீமாதவவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விலை ——— பை-ரு.

1905.

சா சி

கலியுகச்சிந்து.

நாதநாமக்கிரியை - பல்லவி.

காலத்தைப்பாராய் கலிகாலக்கொடுமையின்
கோலத்தைக் கேளாய்.

அநுபல்லவி.

காலத்தின் கோலத்தை ஞாலத்தின்மேலோத
பாலொத்தமொழியாளே வேலொத்தவிழியாளே (கால)

சரணங்கள்.

அரிசிப்படிரெண்டு பணமாய்முடிக்குது
ஐயய்யோயேழைகள் புழுவாய்த்துடிக்குது
வரியெல்லாந்தலைக்குமேல் வரண்டாய்த்திரியுது
வாங்கினகடனுந்தான் கோட்டுக்கிழுக்குது
புலம்புதேகுடிகள்—ஆடி ஆவணிகூட
பொசுக்குதே வெய்யல்
நாட்டுப்புறங்களெல்லாம் ஓட்டம்பிடிக்குது
நஞ்சைபுஞ்சைகளெல்லாம் பஞ்சாய்ப்பறக்குது
காடுமேடுகளெல்லாம் கட்டுதிட்டமாச்சு
காக்காய்குருவிகூட பிழைப்பதரிதாய்ப்போச்சு (கால)
மழையோமழையோவென்று மானம்பார்க்கலாச்சு
மாடுஆடுகள்பேச்சு பில்லுக்கலையலாச்சு
தலையும் இளைத்துப்போச்சு தண்ணீப்பஞ்சமாச்சு
தங்கத்தைவைத்தாலும் வட்டிகேழ்க்கலாச்சு
முறைகெட்டுப்போச்சு—தாயார்தமக்கைபோலே
பெண்தேடலாச்சு

ஜோன்டமினிப்பேச்சி கூழுக்கலையலாச்சி
கூத்தியார்பாசனைக் சார்த்துயிராச்சலாச்சி
சொந்தப்படிப்பெல்லாம் சூத்துக்குபணையாச்சி
மொன்னுமிங்கிலீஷுக்கு நல்லப்பிழைப்பாச்சி (கால)

காட்டில்மழையாச்சி கழனிவொணந்துபோச்சி
கல்பளைதார்த்துச்சோலை யிரட்டிச்சொருசலாச்சி
போட்டவிரைகளெல்லாம் பொரியாய்ப்பொரிஞ்சிபோ
பிள்ளைகுட்டிகளெல்லாங் கஞ்சிக்கலையலாச்சி[ச்சி
மண்மாரியாச்சி—நாட்டுப்புறங்களெல்லாங்
மண்மாரியாச்சி

பிருந்தவிளைகளெல்லாம் யேழைவிளைத்தமென்று
பிரவும்பகலுமாக முறையிட்டிருக்கும்போது
எடுயெடுவாயிரா பிடிபிடிஞுமென்று
ஏழூட்டுபோராக வீட்டைவளைத்துகொண்டு
ஜப்திசளாச்சி—ஆடுமாடுகளெல்லாம்
யேலமாய்ப்போச்சி

வீட்டுவரிவந்து வாசக்கால்தூக்குது
வேபாரவரிவந்து சாமானைவளைக்குது
குப்பைவரிவந்து குடிசையைபிடுங்குது
கொளுத்தும்விளக்குவரி கழுத்தைப்பிடிக்குது
வேடிக்கையாச்சி—தட்டுமுட்டுகளெல்லாம்
வியாபாரமாச்சி

களிதின்னுபிழைக்கவும் கேவுருமொரைக்குது
கம்புசோளங்கூட வம்புகள்செய்யுது

கூலிக்கிபோனாலும் லஞ்சங்கள்கேழ்க்குது
குடுத்தாலும்நாலானுள் அடித்துத்துரத்துது(கால)
சீமைசிட்டிகளெல்லாம் சிரிப்பாய்சிரிச்சிபோச்சி
சமுசாரி தாசியும் வேஷம்ஒன்றுய்ப்போச்சி
பொருமையாய்பிழைத்தவர் பொழப்புக்குயிழுப்பாச்
பொய்சாட்சிசொல்வோர்க்கு கைமேல்காசியாச்சி[சி
கடைகெட்டுப்போச்சி—சருவகுலங்களும்
நடைதப்பிப்போச்சி

அந்தணர்குலத்துடன் ஆசாரம்போச்சுது
அவரவர்சாஸ்திரம் பரணைமேல்தூங்குது
பணமென்றால்பிணங்கூட வாய்கொஞ்சந்திரக்குது
பாசுபண்ணவர்பேச்சி வேலைக்கிதாங்குது(கால)

தாயொப்பிவந்தாலும் சேயன்புணரலாச்சி
தம்பித்தமயன்பெண்டை தெம்பாயிழுக்கலாச்சி
நாய்போலேவிலைமாதர் யெங்கும்பெருத்துப்போச்சி
நாயகன்ஒப்பியே கூட்டிப்பிழைக்கலாச்சி
சுணைகெட்டுபோச்சி—பணமேபெருமையாச்சி
ஜாதிகள்போச்சி

பலந்தஉத்தியோகத்தை பார்க்கமனைவியாச்சி
படுத்துயிருக்குமபோது அடுத்துப்புணரலாச்சி
கலங்கிவேசியரெல்லாங் கண்ணீர்சொரியலாச்சி
கட்டினமனைவியை விட்டுப்பிழைக்கலாச்சி
வழிகெட்டுபோச்சி—தகப்பன்பிள்ளையுங்கூட
வழக்காடலாச்சி

பூமியில்பிறப்பற்று காவியுடுத்தலாச்சி
பூர்ணமாய்கெஞ்சாதம் அடிச்துமயங்கலாச்சி
சாமியென்றவருக்குப் பேர்கள்நிகளமாச்சி
சாம்பலைப்பூசவும் தெரியாதவர்க்குச்சீச்சீ (கால)

கடுகடுத்துப்பெற்றத் தாயையுதைக்கலாச்சி
கட்டினமனைவிசொல் தட்டாதிருக்கலாச்சி
கொடுத்தக்கடனைக்கேட்டால் கோட்டைக்காட்டலா
கொஞ்சம்யேமாந்தாக்கால் பஞ்சாயடிக்கலாச்சி[ச்சி
அஞ்சாமல்போச்சி—பெரியோர்சிரியோரென்ற
அளவெல்லாம்போச்சி

அருத்தமுண்டைகள்பிள்ளை பெத்துவளர்க்கலாச்சி
அப்பன்யேமாந்தாக்கால் தாயைப்புணரலாச்சி
திருட்டுபிள்ளைகள்பெத்து முறித்துயெறியலாச்சி
தெய்வத்தைநினைப்பவர் லட்சத்திலொன்றாச்சி

கட்டிகொடுக்குமுன்னே கள்ளக்குட்டிகளாச்சி
கட்டினமூன்றுநாள் பெத்துமுறிக்கலாச்சி
மட்டிமுண்டைகளாலே மானங்கெட்டுபோச்சி
மாதாபிதாபேச்சி தலையைதள்ளியலாச்சி
அதிகமாய்போச்சி—குடி கெட்டி முண்டைகள்
அணியணியாச்சி யிப்போ

பெண்கள்வியாபாரம் செய்துபிழைக்கலாச்சி
புருஷன்கொழுக்கக்கட்டி பிணத்திதிரியலாச்சி
சண்டைபோடிக்கெல்லாம் பணத்தைதபிழைக்கலாச்சி
சாமிக்குக்கொடுப்பவர் பூமியில்மருந்தாச்சி (கால)

பஞ்சாங்கம்படிப்பெல்லாம் பஞ்சாய்பறந்துபோச்சி
பரசிக்கும்பணந்தந்து சிரப்பாய்நடக்கலாச்சி
அஞ்சாமல்பரோத்தில் அந்தணர்விழலாச்சி
அவர்கள்மனைவியெல்லாம் அறுந்தபுலம்பலாச்சி
குலங்கெட்டுபோச்சி—அந்தணருமேலெயே
குடிகெட்டுபோச்சு

தலைக்குபுரந்தவன்போல் டொப்பிசட்டைகளாச்சி
சோறும்சாறும்போச்சி பட்சணாக்கலாச்சி
அடுப்புச்சரையிலகூட யிங்கிலீஷ்பேசலாச்சி
ஐயமார்குடிக்கவே அடிக்கொருசடையாச்சி (௧௰)

சிமைதுரைகளெல்லாம் காவிபுடிச்சலாச்சி
சாதிபிறிவெல்லாம் சட்டைமாட்டலாச்சி
காலம்தப்பிறாச்சி கருப்புகுடையாய்போச்சி
கண்டவிடங்களெல்லாம் பைபில்பிரசலாச்சி
வேதங்கள்போச்சி—கிருஸ்தவர்கூச்சலே
வேடிக்கையாச்சி

கோவில்குளங்களெல்லாம் குட்டிச்சுவராட்போச்சி
குடியாசிகமாச்சி கடைகள்பெறுத்துபோச்சி
கிறுமதேசிகளெல்லாம் தலைபரப்பரந்துபோச்சி
கண்டவிடத்தில்வாந்திபேதியதிகமாச்சி

கலியுகநடத்தைக்கு கடவுளும்சிரிக்குது
காலத்தைச்சேர்த்தாட்போல் மாரிகள்வருகுது
குளிர்நகரச்சலிப்பாறி கூண்டோடோய்க்குது
குனிந்துயொர்தபேரை வாந்தியில்மடக்குது

பேதியிற்பாதி—யிப்படிமடிஞ்சியும்
துள்ளுதே கூலி ஐயோ

பின்னைக்கிருந்தவர் நாளைக்கில்லையென்று
யாருக்குந்தெரியுமிந்த ஊருக்குந்தெரியுமிது
யேழைகெருவங்கொண்டு வீணாகமடியுது
யெண்ணிப்பார்த்தால் தினம் ஆயிரஞ்சாயுது (கா)
பணங்கையில்லை நமக்கென்று பொய்சாட்சிசொல்லாதே
பரதேசியேழைமேல் புலிபோலத்துள்ளாதே
மூணுவேஷம்போட்டுநீ மோசங்கள்செய்யாதே
மூச்சிவெளியேபோனால் சீச்சிபிணமாச்சே
கெருவங்கொள்ளாதே—நிலையில்லா கழுதேநீ
கெட்டுப்போகாதே

ஊத்தஉடலைநம்பி ஓடிபோகெண்ணாதே
ஊரைபகைத்துக்கொண்டு வேருடன்மாளாதே
காத்தைமலைத்துக்கொண்டு கருமங்கள்தேடாதே
கலியுகசிந்தைநீ பழுதாகசொல்லாதே (கா)

கும்மிப்பாட்டுகள்.

அண்ணனைக்கூத்தம்பி துரோகஞ்செய்யுங்காலம்
அப்பனைப்பிள்ளை யுதைக்குங்காலம்
பண்ணினநன்றி மறக்குங்காலம்—பழி
பாவத்துக்கஞ்சாக்கலிகாலம். (கா)

புருஷனைப்பெண்டு நுதைக்குங்காலம் - பெற்ற
பெண்ணை தகப்பன் புணருங்காலம்

தருமநெறியை மறக்குங்காலம்—கெட்ட
தருதலைக்கேத்த கலிகாலம் (௨)

தங்கையைஅண்ணன் புணருங்காலம் ஐயா
தாயைப்போலிந்து மடிந்தகாலம்
மங்கைக்கு மஞ்சளரைக்குங்காலம் ஐயா
மானமில்லாத கலிகாலம (௩)

கொண்டபுருடனை திட்டுங்காலம் இவள்
கூலிகொடுத்து புணருங்காலம்
முண்டைகள்பிள்ளை பெருகுங்காலம் ஐயா
மோசத்துக்கஞ்சா கலிகாலம் (௪)

கட்டினமாது அலையுங்காலம் யிவன்
காவியுடுத்தித்திரியுங்காலம்
புட்டிபுட்டியாய் குடிக்குங்காலம் ஐயா
புளுகருக்கேத்த கலிகாலம் (௫)

பொய்யானபத்ரமெழுதுங்காலம் சாட்சி
பூட்டியேகோட்டில் செலிக்குங்காலம்
தெய்வப்பொருளைத்திருடுங்காலம் இது
தீவினைக்கஞ்சா கலிகாலம் (௬)

அருமையரியாமுரட்டுக்காலம் மிது
கர்ம்மியைபோற்றுந் திருட்டுக்காலம்
சிறுமணவூர்முனி சாமிசொல்வாக்கியம்
சோதித்துபார்கலி காலகுணம்

கலியுகச்சிந்து முற்றுப்பெற்றது.